# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 15/நகராட்சி/2019**

**நாள் : 11/03/2019**

**திரு V. புஷ்பராஜ்,**
**இராஜபாளையம்.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**இராஜபாளையம் நகராட்சி,**
**இராஜபாளையம்.** – **எதிர் மனுதாரர்**

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம், குமரன் தெரு, 95/330 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு V. புஷ்பராஜ் அவர்களின் 23.01.2019 நாளிட்ட முறைமீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 15/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு சம்பந்தமாக நகராட்சி ஆணையரின் அறிக்கையினை பரிசீலனை செய்து கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம், குமரன் தெரு, 95/330 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு V. புஷ்பராஜ் என்பவர் இராஜபாளையம் நகராட்சிக்குட்பட்ட மலையடிப்பட்டியில் தாழ்த்தப்பட்ட இனத்திற்கான மயானம் உள்ளது என்றும், அம்மயானம் சீர்செய்யப்படாமல் நகராட்சியால் புறக்கணிக்கப்படுவதாகத் தெரிவித்து, சீர்செய்தவற்கான நடடிவக்கையினை மேற்கொள்ள நகராட்சி ஆணையருக்கு ஆணையிடுமாறு இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. இராஜபாளையம் நகராட்சி, வார்டு எண்.20, மலையடிப்பட்டி, காமராஜபுரம் பகுதியில் அமைந்துள்ள மயானத்தில் ஜே.சி.பி. இயந்திரம் மற்றும் துப்புரவுப் பணியாளர்கள் மூலம் முட்செடிகள் மற்றும் குப்பைகள் அகற்றப்பட்டு விட்டன என்று 18.02.2019 நாளிட்ட கடிதத்தில் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், மயான நுழைவு வாயிலில் உள்ள கதவுகளின் பழுதுகள் சரி செய்யப்பட்டு மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

தண்ணீர் வசதியும் செய்யப்பட்டுள்ளது என்றும் இனி வரும் காலங்களில் மயானம் முறையாகப் பராமரிக்கப்படும் என்று தெரிவித்து தற்போதைய நிலை குறித்த புகைப்பட நகல்களையும் நகராட்சி ஆணையர் சமர்பித்துள்ளார்.

3. இராஜபாளையம், மலையடிப்பட்டி, காமராஜபுரம் பகுதியில் அமைந்துள்ள மயானத்தினை சீர்படுத்துவதற்கு நகராட்சி மேற்கொண்ட செயல் மிகவும் பாராட்டுக்குரியது. இனி வரும் காலங்களிலும் மேற்குறிப்பிட்ட மயானத்தினை முறையாகப் பராமரிப்பதற்கான நடவடிக்கையினை தவறாது மேற்கொள்ள வேண்டும் என இராஜபாளையம் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2019**–ஆம் ஆண்டு, **மார்ச்** திங்கள், **11**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. **திரு V. புஷ்பராஜ்,**
   **95/330, குமரன் தெரு,**
   **இராஜபாளையம்,**
   **விருதுநகர் மாவட்டம்.**

2. **நகராட்சி ஆணையர்,**
   **இராஜபாளையம் நகராட்சி,**
   **இராஜபாளையம்.**

**நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**